முருகப்பெருமான் துணை

**மகான் இராமலிங்கசுவாமிகள் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

16.07.2021, வெள்ளிக்கிழமை

1. தனிப்பெருங் கருணை வடிவான
தயாபரனே ஆறுமுக அரங்கா
தனித்துவம் மிக்க ஞான உலகை
தன்னார்வ தொண்டுள்ளம் கொண்ட
2. கொண்ட ஞானப்படைகள் வழி
குருவாய் நின்று வழிநடத்த
தொண்டாக வந்த மகாஅவதாரமே
தேசிகனே உமக்கு துல்லிய ஆசி
3. ஆசிதனை பிலவ மிதுன திங்கள்
அய்யாறீர் திகதி புகரோன்வாரம்
(பிலவ வருடம் ஆனி மாதம் 32ம் நாள், 16.07.2021 வெள்ளிக்கிழமை)
ஆசிபட இராமலிங்க சுவாமிகளும்
அருளுவேன் அகிலம் நலம்பெற வேண்டி
4. வேண்டியே முருகக் கடவுளே
விடாது நித்தம் நித்தம் வழிபட
தொண்டாக வரமாக அருளும்
தேசிகன் வழிகாட்டலே கலியின்
5. கலியின் சிறந்த மார்க்கமாகும்
கடைத்தேற உலக மக்களுக்கு
கலியின் கடைசி வாய்ப்பிது
கண்டும் உணரா ஏற்கா
6. ஏற்கா அஞ்ஞான வழிமக்கள்
இடைவிடா தொடர நேர்ந்தால்
அற்புதம் காணா பேருலகை
அழிவெனும் பிரளயம் அனுகி
7. அனுகி அச்சுறுத்தும் நச்சக்கிருமி போல்
அளவிலா நிறைய பேரிடர்கள்
அனுகி அளவிலா எண்ணிக்கையில்
அழிவுறும் மனித சமூகம்
8. மனித சமூகம் பாதுகாப்பு பெற
மரணமில்லா வாழ்வுபெற
இனியும் காலம் கடத்திடா
இணைந்து அரங்கஞானி காட்டும்
9. காட்டும் சன்மார்க்க நெறியில்
கலந்து கரைந்து வழிதேடி
வாட்டம் போக வாழ்வு நிலைக்க
வன்மமான சகல அல்லலும் அகல

10. அகல வேண்டி உயர் வழிபாடாம்
அருட்பெருஞ் சோதி சரவண சோதி
யுகம் காக்கும் உயர்சோதி ஏற்றி
உலகோர் சுத்த நெறிபட வாழ்ந்து

11. வாழ்ந்து வடிவேலனின் செபதபம்
வருக வருக முருகா முருகா என
தாள்பணிந்து வழிபாடு கூட்டியே
தருமபலம் பெருக்க உலகம் பாதுகாப்பு பெறும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–

தாழ்வகலும் தர்மம் தலைத்தோங்கும் நமக்கு
வாழ்வளிக்கும் வள்ளலார் வழிபாடே

அம்மையாம் வள்ளலார் அடியினை போற்றிட
நம்மையும் காத்து நமக்கருள் செய்வாரே

புண்ணிய வள்ளலார் பொற்பதம் போற்றிட
எண்ணிய அனைத்தும் எளிதில் சித்தியே

அன்னையாம் வள்ளலார் அடியினை போற்றிட
என்னையும் காத்து எனக்கருள் செய்தாரே

இம்மை மறுமையும் இருமையையும் வென்றிட
அம்மையாம் வள்ளலார் அருளினார் எனக்கே

தாயாம் வள்ளலார் தந்த அருட்பாவை
வாயார வாழ்த்தி மகிழ்கின்றோமே

ஆற்றலாம் வள்ளலார் அருளிய அருட்பா
மாற்றம் உண்டு மனமும் செம்மையே

வள்ளலார் திருவடியை வாழ்த்தியே வணங்கிட
நல்லதொரு வாழ்வும் நமக்கே அருளுவார்

அருட்ஜோதி வள்ளலார் அருளிய அருட்பா
இருளெல்லாம் விலகியே இன்பமும் உண்டாம்

பற்றற்ற வள்ளலார் பதத்தை போற்றிட
நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்